# ஸ்டாலின் ஜெகதீசன் தேக நிலை.

## கண்பார்வை தடுமாற்றம்.

### நாவசைக்கக் கஷ்டம்.

### பேசினால் பெருமூச்சு.

### "கொழுப்பு கரைந்து விட்டது, குடல் வேலை செய்யவில்லை"

### டாக்டர் அபிப்பிராயம்.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 2.

இன்று (2-6-38) ஸ்டாலின் அவர்களின் உண்ணாவிரதம் 33-ம் நாள். இந்த விஷயத்தில் தோழர் காந்தி அவர்களைவிட தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் மீறிவிட்டார். (காந்தி அவர்கள் 21 நாள் தான் பட்டினிகிடந்தார்) ஆனால், சென்னை பத்திரிகைகள் மட்டும் கட்டுப்பாடாக தோழர் ஸ்டாலின் அவர்களைப்பற்றி எழுதாமலே இருக்கின்றன.

தோழர் ஸ்டாலின் அவர்கள் உடல் நிலை நாளுக்கு நாள் கீழ் நோக்கிக்கொண்டே வருகிறது. நாளுக்கு நாள் பலக்குறைவு அதிகப்படுகிறது. பார்வை தடுமாற்றமாக இருக்கிறது. தாராளமாகப் பேசமுடியவில்லை. இரண்டொருவார்த்தை பேசினால் பெருமூச்சு வருகிறது.

உடல் நிலையைச் சோதித்துப் பார்த்து உடம்பில் இருந்த கொழுப்பு எல்லாம் அடியோடு கரைந்து போய்விட்டதென்றும், குடல்கள் வேலை செய்யாமல் நின்று விட்டன என்றும் மற்ற உறுப்புகளும் மந்தமாக வேலை செய்கின்றன என்றும் தெரிவித்தார். இப்பொழுது 62 பவுண்டு குறைந்திருக்கிறார்.

தோழர் ஸ்டாலின் அவர்களின் நண்பரும் கூத்தாநல்லூர் வாசியும் பிரபல வியாபாரியும் மிராசுதாருமான தோழர் ந வ. மு. ந. அப்துல்லா அவர்கள் ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்று தந்தி அனுப்பினார். அதற்கு ஸ்டாலின் பதில் தந்தி அனுப்பி விட்டார்கள்.

## ஸ்டாலின் ஜெகதீசன் உண்ணாவிரதம் இன்றைக்கு 34ம் நாள்

இளைப்பும் களைப்பும் முன்னைவிட அதிகம். ஆனால் ஊக்கம் முன்னைவிட அதிகமாயிருக்கிறது. நேற்று (1-6-38) திருச்சியிலிருந்து இரண்டு பிரபல தோழர்கள் வந்து பார்த்துவிட்டு உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளும்படி நிரம்ப உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், ஸ்டாலின் அவர்கள் மேடி தோழர்களுக்குத் தமது மரியாதையும் அன்பையும் தெரிவித்துக் கொண்டு உண்ணாவிரதத்தை ஒருக்காலும் விட முடியாதென்றும் கட்டாய இந்தியை எடுத்து விடுகிறவரையில் உண்ணா நோன்பு இருக்கமுடிவு செய்து விட்டதாகவும் தெரிவித்துக்கொண்டார். வந்த தோழர்கள் மிக்கவருத்தத்துடன் பிரிந்து சென்றார்கள்.

தோழர் ஸ்டாலின் அவர்கள் நாள்தோறும் பொதுக்கூட்டங்களுக்குச் சென்று வருகிறார். அப்படிச் செல்வது அவருக்கு மிகுந்த தேக வருத்தத்தை உண்டாக்குகிற போதிலும் அதைப் பாராமல் சென்று வருகிறார். கூட்டங்களில் சென்று நாற்காலியில் உட்கார முடியாமல் சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருக்கிறார். சென்னையில் நடக்கும் எல்லாக் கூட்டங்களுக்கும் தவறாமல் போய்வர முடிவு செய்திருக்கிறார். அப்படிப் போவது அவர் மனதிற்கு ஊக்கமும் ஆறுதலும் அளிக்கிறது எனினும் உடம்புக்கு ஆபத்தானது என்று டாக்டர்கள் சொல்லியும் கேட்கவில்லை. இன்று காலை ஒரு பெயர் பெற்ற டாக்டர் வந்து ஸ்டாலின் அவர்கள்

## தயார்

### வேலூர்

வேலூர், மே 31.

நாங்களும் ஆச்சாரியாரின் ஆணவ ஹிந்தி நுழைப்பை எதிர்த்துச் சிறைபுக, அடிபட மற்றெல்லாத் துன்பங்கள் துய்க்கவும் தயாராயிருக்கிறோம்.

ஆர். விநாயகம் (வயது 24)
மா. கண்ணப்பர்,

### தஞ்சை

தாஞ்சாவூர், ஜூன், 1

நம் தமிழ் நாட்டில் தமிழ் மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக கனம் ஆச்சாரியார் தனது பதவி ஆணவத்தினால் கொண்டு வரும் கட்டாய ஹிந்தி திட்டத்தை எதிர்த்து நிற்கும் தொண்டர்களுடன் நாங்களும் பதிவு செய்து கொள்வதுடன் நாங்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

டி. வி. ஜெகநாதன்,
டபுளயு. ஜெம்புலிங்கம்,
டி. டி. சொக்கலிங்கம்,
எஸ். சிதம்பர செட்டியார்,
எம். கணபதி,
ஐ. பீட்டர்,
பால் ராஜ்,
கனோஜி,
ந. மீ. நடராஜன்,
டி. எஸ். பாலசுப்ரமண்யம்,
டி. ஆர். நீலமேகம் பிள்ளை,
டி. எம். ராமமூர்த்தி,
டி. பி. ராமச்சந்திரன்,
என். சுந்தரராஜுலு,
டி. எ. பாலகிருஷ்ணன்.

### தூத்துக்குடி

தூத்துக்குடி, ஜூன். 1-

முதல் மந்திரி ஆச்சாரியாரின் கபட சூழ்ச்சியை சிதறடிக்க நடைபெறும் ஹிந்தி சத்தியாக்

எஸ். டி.
இன்றே பரீக்ஷியுங்கள்.